செய்தித் தாளாகப் பதிவுபெற்றது. | வேண்டுகோள்: பெருமையோறுமீ வேண்டுவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஸூ (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   பிரதி விலை: சதம் 20   தொலைபேசி: 356

புத்- அசு] யாழ்ப்பாணம்.- ஆனந்த ஸூ ஆனிமீ எ-உ வெள்ளிக்கிழமை (21-6-1974) | இல: கஉ

# பசுஞானம் பதிஞானம்

## ஆகியவற்றின் விளக்கம்

சட்டத்தரணி திரு. இ. நமசிவாயம் அவர்கள்
(தருமகர்த்தா; திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபை)

(முன் வளர்ச்சி -3)

சைவ ஆகமங்கள் வேதத்தின் கருமகாண்டம் ஞானகாண்டங்கட்குச் சிறந்த விளக்கங்களாய் அமைந்திருந்தும், சங்கராசாரியார் இவைகளைச் சிறிதும் பொருட்படுத்தாது தமக்குப் பொருத்தமான சில உபநிடதங்களை மட்டுமே வைத்து உரை எழுதிச் சென்றதோடல்லாமல் இத்திவ்விய ஆகமங்களை வாமம் முதலியவற்றின் தந்திரங்களோடு ஒப்ப வேதத்துக்குப் புறம்பான தீட்சை முதலிய ஒழுக்கங்களைக் கூறுவனவெனப் புறக்கணித்து விட்டனர். அச்செயல் சைவசமயத்துக்கு உவப்பானதல்ல. ஏனெனில் சிவாகம விதிப்படி திருக்கோவில்களை அமைத்து அவைகளில் விக்கிரகங்களைப் பிரதிட்டை செய்து நித்திய நைமித்தியங்களாகிய பூசைகளையும் விழாக்களையும் செய்து நடாத்தி வழிபாடு செய்கிறவர்கள் விசேட, நிர்வாணமென்னும் தீட்சைமுறை அனுட்டிப்பவர்கள். மெய்யுணர்ந்து வீடுபேறு எய்துவதே பிறவிப்பயன். கடவுள் எனக் கூறப்படும் மெய்ப்பொருளை ஒருவன் உணர்வின் கண் காப்பதே மெய் உணர்தல் என்பது. அங்ஙனம் காணலுறும் நெறியின்கண் மூன்றுபடி நிலைகள் சித்தாந்த சைவத்துள் விளக்கப்படுகின்றன. அவை முறையே பாசஞானம், பசுஞானம், பதிஞானம் ஆகியன.

பிறப்பு நிலையிலுள்ள ஆன்மா உடம்பையும உலகையும் பற்றிநின்று உலகப் பொருள்களைச் சுட்டியறிந்து வரும் உணர்வு 'பாசஞானம் எனப்படும். அடுத்தபடியாக 'நான்யார்' என உள்நோக்கி உணர்தல் வேண்டும். அவ்வாறு உணரும்போது தன்னைத் தூலவுடம்பு, சூக்கும உடம்பு முதலியவற்றின் வேறாக "இது நான் அல்லேன், இதுதான் அல்லேன்' எனக் கழித்துச் செல்லும் ஆய்வுணர்வு நிகழும். அங்ஙனம் கழித்து மேம்படும் உணர்வு தத்துவக் கட்டுப்பாட்டின் நீங்கி வியாபகமாய் விளங்கும். அந்நிலையில் அவ்வான்மா தான், ஒன்று மட்டும் மெய்ப்பொருள், முன்கண்டுவந்த பொருள் அனைத்தும் கனவிற் கண்ட பொருள், விழிப்பு நிலையில் மறைவது போல மறைந்தொழிவன என உணரும். இது "நான் பிரமம்" 'அகம்பிரமாஸ்மி' என நிற்பது. இந்த அனுபவ உணர்வே முடிந்த மெய்யுணர்வு என வேதாந்திகள் கொள்வர். ஆனால், சைவ சித்தாந்த நெறிப்படி மலவாசனையாலுய மயக்கத்தால் நானே முதற் பொருள் (அகம் பிரமாஸ்மி) என்னும் உணர்வு நிலையில் நின்றமாணுக்கனைச் சைவ ஆசாரியர் பின்வருமாறு வினவி முதல்வனது அருள் உண்மையை நினைப்பிக்கின்றார்:

'அன்று முதல் இன்றளவும்
அண்ணல் அறிவிப்பதன்றி
இன்(று) அறிவேன் நான்
என்(று) இயம்புவதென் ?
— என்றும்
அவத்தைதனில் உணர்த்தி
(ஆங்கு) அருத்தி இன்(று)
இத்
தவத்தின் உணர்த்தினர்
ஆர்தான்?

"உன் அறிவை நீயே
உணர்வையே ஆமாகில்
இந்நெடுநாள் பாசத்து)
இயைவையே — உன்
அறிவை
நீங்கா அறிவாகி நீரும்
இரதமும் போல்
ஆம் காண் அரனுர் அருள"

முதல்வன் திருவருள் இதுகாறும் மறைந்து நின்று உணர்த்திவந்தது இப்பொழுதும் தவங்காரணமாகச் சற்குரவனாக நின்று உணர்த்தியதால் தான் நீ என்னை உணர்ந்தாய் நீ என்றும் முதல் ஆகாய்; இங்ஙனம் திருவருள் உண்மையை உணர்வான் மாணவன்.

தத்துவ அடைப்படையிலும் சாதனையிலும் வேதாந்தத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் இன்னும் பல வேறுபாடுகள் உள. இங்கு அவைகளை விரித்துக் கூறின் மிகையாகும்.

தொன்மையும் சிறப்பும் வாய்ந்த சமயம சித்தாந்த சைவமேயாகும். முழுமுதற் கடவுளாகிய சிவபரம்பொருளைத் தலைவனாகக் கொண்டு அப்பரம்பொருளை வணங்கி உய்யும் நெறியை வகுத்துக் கொடுக்கும் சமயமே சைவ சித்தாந்த சமயமாகும்.

சங்க இலக்கியங்களாலும் உரைப்பா, மொஹஞ்சதாரோ முதலிய இடங்களில் கிடைக்கும் பொருள்களாலும் இதன் பழமை நன்கு அறியப்படும். சித்தாந்த சைவம் எல்லாச் சமயங்களையும் நான்குவகையில் அடக்கிக்கூறும்: அவை,

(1) புறப்புறச் சமயம் (2) புறச்சமயம் (3) அகப்புறச்சமயம் (4) அகச்சமயம் என்பன இப்பெரும் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் ஆறு உட்பிரிவுகள் உண்டு:

வேதாந்தம் வேதங்களில் சிற்சிலபகுதிகளையும் சிவாகமங்களையும் பிரமாண நூல்களாகக் கொள்ளாததைப் புறச்சமயம் என்பர்.

"சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை தமிழ் மக்களின் பேரறிவின் பெரும்பயனாகும்.

பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும் வழிபாட்டு முறைகளையும் விடச் சைவ சித்தாந்தமானது சில சிறப்பியற்பண்புகளைத் தனக்கெனப் பெற்றிருளிர்கின்றது. இன்னும் உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களும் பேரறிவுப் பொருளாகிய கடவுளையும் சிற்றறிவுடைய உயிர்களையும் அறிவில்லாத சடப்பொருள்களையும் ஆராயும் முத்திறப்பட்ட ஆராய்சியில் அடங்குவனவே. இப்பொருள்களையும் பற்றி எழுந்த பலதிறப்பட்ட கொள்கைகளும் அக்கொள்கைகள் எல்லாவற்றையும் பற்றிய ஆய்வும் அவற்றுட் பொருந்துவன இவை பொருந்தாதன இவை என்றும் பகுத்தறிவு விளக்கமும் பொருந்துவனவற்றைத்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

---

## பருளை விநாயகர் திரு ஊஞ்சல்

சுழிபுரம் பருளாய் விநாயகர் கோவில் தேர்த் திருவிழா எதிர் வரும் செவ்வாய்க்கிழமைநடைபெறும் பொழுது சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை ("பருளாய் விநாயகன்") யாத்த பருளை விநாயகர் ஊஞ்சல் நூல் வெளியீடும் இடம்பெறும். சுழிபுரம் சைவ சித்தாந்த சங்கச் செயலாளர் திரு த. மயில்வாகனம் அவர்கள் இதற்காய ஏற்பாடுகளைச் செய்கின்றார்.

---

# சிவனடியார் பெருமை

மதுரையில் விருபாக்கன் என்னும் ஒரு பிராமணன் இருந்தான். அவன்மனைவி பெயர் சுபவிரதை. அவர்கள் பிள்ளைப் பேறின்றி வருந்தினார்கள். தவஞ்செய்து ஒரு பெண் மகவைப் பெற்றார்கள். அவள் பெயர் கௌரி. அவன் பிறவிநோயை நீக்கக் கூடிய வழியைக் கூறும்படி பிதாவினைக் கேட்டாள். அவர் கௌரி மந்திரத்தை உபதேசித்தார். அவள் அம் மந்திரத்தை சிரத்தையோடு செபித்துக்கொண்டு வந்தாள். கௌரிக்கு எட்டு வயசாகும்பொழுது அவளுடைய தந்தையார் அவளை ஒரு வைணவப் பிரமச்சாரிககு மணஞ் செய்து கொடுத்தான். கௌரியினுடைய சைவக் கோலத்தையும் சிவ சிந்தனையையுங்கண்ட அவளது மாமன் மாமியர்கள் அவளை வேறாக ஒதுக்கி வாழ்ந்தார்கள். ஒரு நாள் கணவன் வீட்டிலுள்ளவர்கள் அவளைத் தனியே விட்டு வீட்டைபம பூட்டிக்கொண்டு அயலூருக்குப் போய்விட்டார்கள். அப்பொழுது கௌரியினுடைய சிந்தனையில் ஒரு சிவனடியாரையேனும் தான் காணவேண்டும்; அவரை வழிபடவேண்டும் என்னும் எண்ணம் உதித்தது.

சிவனடிக் யார்கன் பில்லாச்
சிந்தையே
யிரும்பேவல் செய்துநாளும்
அரனடியார் திறத் தொழுகா
வாக்கையய மாஞ் செவி
கண்ணுதி யைந்தும
பவனடியா ரிடைச் செலுத்தாப்
படிவமே பர்வைமறை
பரவுஞ் சைவ
தவநெறியில் லாநெறியே
பவநெறியென் றளியளாய்த்
தளர்வாள் பின்னும்.

மனமாசை ஒழிப்பது விபூதியே என்று உபநிடதங்கள் கூறும். மண்ணைப் பூசும் வைணவர்கள் வீட்டில் தனித்திருக்கும் கௌரியானவள் சிவனடியார்களைக் காணப் பெருமையினல் இவ்வாறு சிந்திப்பாளாயினள். சிவனடியாருக்கு நாடோறும் தொண்டு செய்யாத சரீரமே மரம். காது கண் முதலிய ஐந்திந்திரியங்களையும் சிவனடியாரிடத்துச் செலுத்தாத வடிவமே பாவை. எல்லாந் தாமேயாய் உயிர்க்குயிராயுள்ள சிவ பெருமானே அவர் தம் மடியார்களுக்கு மனம் வாக்குக் காயம என்னும் மூன்றானுஞ் செய்யப்படும் மெய்ப் பத்தி வழியே வந்தருள் செய்வர். அப் பத்திவழி நிற்பவருக்குப் பிறவித் துன்பத்தை நீக்கும் பொருட்டு எடுத்த வடிவம் அவருடைய அடியாருடைய வடிவமன்றோ?" என்று கருதிக் கவலைகொண்டிருந்தாள்.

பின்பு சிவபெருமான் ஒரு விருத்தப் பிராமணனாகி வந்து விருந்தருந்திக் கொண்டிருக்கும் பொழுது அயலூருக்குச் சென்றிருந்த மாமன் மாமியர்கள் திரும்பி தமதில்லத்துக்கு வந்தபொழுது, விருத்தனாக வந்த சிவனடியார் ஒரு வாலிபனானார். கௌரி பயந்துகொண்டிருந்தபொழுது அச்சிவனடியார் ஒரு குழந்தையாகக் காட்சி கொடுத்தார், இதனால் சிவபெருமான் கௌரியின்சிவ பக்தியையும் சிவனடியார் பக்தியையும் உலகுக்குக் காட்டினார், குழந்தையுடன் வெளியே துரத்தப்பட்ட கௌரியைச்சிவபெருமான் உமாதேவியாருடைய கோலத்துடன் சிவலோகத்துக்கு அழைத்துச்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை



# முது பெரும் பண்டிதர்

சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராக மட்டுவில் உரையாசிரியர் திரு. ம. க. வேற்பிள்ளை அவர்கள் நெடுங்காலமாகக் கடமையாற்றி வந்தனர். ஒருதினம் சென்னை மாகாண வித்தியாதிபதி அப்பாடசாலையைப் பார்வையிடச் சென்றனர். அவர் ஓர் இஸ்லாம மதத்தைச் சேர்ந்தவர். தலைமை யாசிரியரைக் கண்டு உரையாட விரும்பினர். உதவியாசிரியர்கள் வித்தியாதிபதியை தலைமையாசிரியருடைய அறைக்கு அழைத்துச் சென்றனர். தலைமையாசிரியர் வைதிக சைவக் கோலத்துடன் காணப் பெற்றார். அவர் ஒரு சிவபூசா துரந்திரர் நெற்றியில் திரிபுண்டரம் சந்தன திலகம் கழுத்தில் உருத்திராக்க மாலை, அரையில் நீர்காவியேறிய வேட்டி, தோளில் சால்வை, வித்தியாதிபதி தலைமையாசிரியருக்குத் தமது அன்பைத் தெரிவிக்குமுகமாக மேலைத்தேச முறைப்படி தமது வலக்கரத்தை நீட்டினார். தலைமையாசிரியர் தமது கையைப் பின்னுக்கிழுத்துக் கொண்டார். நீட்டிக் கைக்குலுக்குவதை விரும்பவில்லை. "அங்ஙனம் செய்தல் அநாசாரம், தாம் உடனே ஸ்நானஞ் செய்தல் வேண்டும்" என பதில் கூறினார். வித்தியாதிபதி "உங்கள் ஆசாரத்திற்கு நான பங்கம் விளைக்க விரும்பவில்லை" எனப் பதில் கூறினார். இவ் வரலாற்றைச் சில வருடங்களுக்கு முன் திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் கூறக்கேட்டுள்ளோம்.

நாவலர்பெருமான் திருவுள்ளப்படி சமய விசேட நிர்வாண தீட்சைகள் பெற்று மரபின்படி இலக்கண இலக்கியங்களைக் கற்று ஆசிரியப் பணிபுரிந்தவர் உரையாசிரியர் திரு. ம. க. வேற்பிள்ளை அவர்கள், அந்த மரபிலே சிறந்த ஆசிரியராகத் தொண்டு புரிந்தவர் தான் இருபாலை, பண்டிதர் மு. வேதாரணியர் அவர்கள். அவர் 1884 ஆம் ஆண்டளவில் இருபாலையில் தோன்றியவர். இருபாலை நல்லூருக்கருகிலுள்ள ஒரு கிராமம், சைவமும் தமிழும் மதிப்படைந்த கிராமம். நாவலர் பெருமானுடைய ஆசிரியர் சேனாதிராய முதலியார் தோன்றியதும் இக் கிராமத்திலேயே. பண்டிதர் அவர்களுடைய பிதாவும் ஒரு பண்டிதர், அவர் பெயர் முத்துக்குமாரு. அவர் நாவலர் பெருமானுடைய நேர் மாணாக்கன்; கல்வி கற்பித்தல், புராண படனம் முதலிய சைவப்பணிகளைப் புரிந்து வந்தனர். அவரும் சிவபூசா துரந்தரர், அவரை மக்கள் முத்து உபாத்தியாயர் என்றழைப்பர்.

பண்டிதர் வேதாரணியர் அவர்கள் வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில், அக்காலம சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தலைமையில் நடத்தப்பட்ட பண்டித வகுப்பிற் சேர்ந்து கலவி கற்று அப்பரீட்சையில் சித்திபெற்றனர். உடுவில் பண்டிர் வ. மு. இரத்தினேசுவர ஐயர், ஊரெழு பண்டிதர் முருகேசு ஐயர் முதலியோர் இவருடைய சக மாணாக்கர்கள். நல்லூர் திரு. த. கைலாயபிள்ளையும் இவருடைய ஆசிரியராவர்.

அக்காலக் கல்வி முறைக்கும் இக்கால கல்வி முறைக்கும் சொல்லற்கரிய பேதங்களுண்டு. அக்காலம் நீதிநூல்கள், திருமுறைகள், நிகண்டு முதலியன மனனஞ் செய்யப்பட வேண்டும. இலககணச் சுருக்கம், இலக்கணக்கொதது முதலியன படித்து, நன்னூல் காண்டிகை நன்னூல் விருத்தி முதலிய இலக்கண நூலகள் பயின்று, தொலகாபபியம், காரிகை முதலியன கறறல் வேண்டும். அந்தாதிகள் கற்கவேண்டும்.

இத்தகைய கல்விமுறையையே பண்டிதர் வேதாரணியர் அவர்கள் தமது பண்டித வகுப்பில் கற்றார். அதன்பின், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியவற்றுக்கு முறையாகப் படிககவும், பயன்சொல்லவும் கூடிய ஆற்றலைத் தமது தந்தையாரிடம் கற்றுக் கொண்டார்.

பள்ளிக்கூடங்களிள் கல்விகற்பித்தல் ஆலயங்களிலும் மடாலயங்களிலும் புராணபடனம் புரிதல் தனிப்பட்ட முறையில் பால பண்டித பண்டித பரீட்சைகளுக்கு மாணவர்களைப் பயிற்றுதல் முதலிய தொண்டினைப் புரிந்தனர். இப் பெரியார் நமது சயய வாழ்க்கைக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் குருவாயமைந்தவர்.

## சைவபரிபாலன சபையில் இவர் ஆற்றிய சமயத்தொண்டு

சைவ பரிபாலன சபையினது தலைவவராக நீராவியடி திரு. அ. தில்லையம்பலம் அவர்கள் தொண்டாற்றிய பொழுது சைவ சமய விருத்திககுப் புராண படனம் இன்றியமையாத பணியென்பதை உணர்ந்த அப்பெரியார் பண்டிதர் வேதாரணியர் அவர்களைக் கொண்டு புராண படனத்தை ஆரம்பித்தார்.

பண்டிதர் அவர்கள் சபையாதரவில் நிகழ்ந்த குருபூசைகளுக்கும் சிவபூசை புரிந்து சபையின் சமயத்தொண்டை விருத்தி செய்தனர். இப்பணிகளெல்லாவற்றையும் ஆரம்பத்தில் சபையார் வாடகைக்குப் பெற்ற வீடுகளில் செய்துவந்தனர். இப்பொழுதுள்ள சபை நாவலர் ஆச்சிரமமண்டபம் நிறுவப்பட்டிருக்கும் நிலம் [illegible] காலத்திலேயே 1945 ம் சபையாரால் விலைக்கு வாங்கப்பெற்றது. இப்பெரியாருடைய தவமே இந்நிலையத்தைச் சபை சேர்க்க [illegible] என்றால் அது மிகையாகாது. 1962 ம் ஆண்டு வரை இப் [illegible]வினது [illegible] சபைக்குக் கொண்டுவந்தனர், சைவ பரிபாலன சபை

# திருதருமை ஆதீனத்தில், முதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தரின் குருபூசை விழா

[நமது சிறப்பு நிருபர் ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம், 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ. ல. ஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள். ஸ்ரீ ஞானம்பிகை சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயல் (முதல்வர் ஜீவசமாபதி கூடி திருக்கோயில்) மகோற்சவம், முதல்வர் ஸ்ரீ. ல. ஸ்ரீ. குரு ஞான சம்பந்தர் குருபூஜை விழாவை யொட்டி 10 நாளும் தெய்வத் தமிழ் மாநாட்டையும், சமயபாட பயிற்சி வகுப்பையும் சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

ஸ்ரீ ல. ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வைகாசித் திங்கள் 27ஆம் நாள் காலை ஆதீன பூஜா மூர்த்திகளான ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளுடன் குருபூஜை விழாவை சிறப்பாக நடத்திவைத்து அனைவர்களுக்கும் அருள் பிரசாதம் வழங்கினார்கள்.

ஸ்ரீ. ல. ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் "சங்கற்ப நிராகரணம்" (உமாபதிசிவம் அருளியது) சித்தாந்த சாத்திர நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்துள்ள நூலையும், பத்தாம் திருமுறை — "திருமந்திரம்" முதல் மூன்று தந்திரங்களையும் அச்சிட்டுள்ள நூலையும் குருபூஜையின் நினைவு மலராக வெளியீடுசெய்தார்கள்.

10 நாள் தெய்வத் தமிழ் மாநாட்டில் யாழ்ப்பாணம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தினசரி பங்கு கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள், மேலும் பேராசிரிகள், புலவர்கள் சமய சொற்பொழிவுகள் செய்தனர்.

வைகாசித்திங்கள் 28ஆம் நாள் பட்டணப் பிரவேசத் திருநாளும், சமயபாட பயிற்சி வகுப்பு நிறைவு விழாவும் நடைபெற்றது; சமயபாடப்பயிற்சி நிறைவு விழாவில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி உயர்திரு என். கிருஷ்ணசாமி செட்டியார் B. A. B. L. அவர்களும், சென்னை உயர்திரு. முருகேசமுதலியார் அவர்களும் சமயபாடபயிற்சியின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்கள்.

"இசைமணி" சீர்காழி திரு. எஸ். கோவிந்தராசன் குழுவினரின் இன்னிசையரங்கு நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் சிவிகையில் எழுந்தருளியதும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடஅதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கு ஆராதனைகள் நடத்தி குரு தரிசனம் செய்து கொண்ட பின்னர், திருமுறைப் பாராயணம், பிரபல நாதசுரக் கச்சேரி, 9 யானைகள் அணிவகுப்பு, வாணவேடிக்கை இவைகளுடன் நான்கு வீதியும், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் சிவிகையில் எழுந்தருளி பட்டணப் பிரவேசக் காட்சி அளித்தார்கள்.

குருபூசையில் மாகேசுவர பூசையும்,(அன்னம்பாலிப்பு) சிறப்பாக நடைபெற்றது.

குருபூசை அன்று காலையில், ஆதீனத்திற்குச் சொந்தமான 28 சிவாலயங்களிலிருந்தும் மற்றும் தில்லைம் பதி, மதுரை, திருச்செந்தூர் முதலிய ஸ்தலங்களிலிருந்தும் பிரசாதங்கள் கொண்டுவரப்பட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வழங்கினார்கள்,

திருதருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடமேறிய பின், முதல் முறையாக மே 26 ஆம் நாள் மதுரையம்பதிக்கு எழுந்தருளி, ஸ்ரீ மீனாக்ஷி சமேத ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்தித் தரிசனம் கொண்டு, மதுரை பதிகங்களை தொகுத்துள்ள நூலை வெளியிடு செய்தார்கள். சிறப்பாக மதுரை மக்கள் வரவேற்புகளும் செய்தனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ. இல. M. B. 10542
வட்டுக் கோட்டை மேற்கு பொன்னுச்சாமி வரதருஜா -வழக்காளி
எதிராக
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் 1. செம்பரநாதர் செட்டியார் சோமசுந்தரம் 2 பெணசரஸ்வதியம்மா — எதிராளிகள்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டின் எம். பி 10512 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுககாணிகளை 1974 ம் ஆடி மீ 29ம் திகதி (29-7-74) திங்கட்கிழமை முறபகல் 10-மணிக்கு முதாம் காணியும் 10-30 மணிககு இரணடாம் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல விறகப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபாய் 1500/ம் 18-1-62 தொடக்கம் 31-5-70 வரைக்கும் 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும இறுக்கும வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபாய் 125/ம் கொமிஷனுககு ஒட்டிய முத்திரைச் செலவு ரூபா 9/ இதில் ரூபாய 1000 கொடுபட்டுளளது

### ஆதன விபரம்

வடமாகணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரச்சி பிரிவு கரச்சு கோயிற்பற்று பிராமணன வயல் மறுபிரிவுகளும பர. நெல இலா 129 குளி 1½ இதற்கெல்லை கிழக்கும் தெறகும கீழ் சொலலப்பட்ட இரணடாம் காணி மேற்கு வாய்ககால வடக்கு சினனததமபி கணபதப்பிள்ளைக்குரிய வாதனம் — பதிவிலககம L 7/92

ஷெயூர் பிராமணன் வயல் மறுபிரிவுகளும பர. நெல் இலா 100 குளி 15 இதறகு கெல்லை கிழக்கும் வடக்கும் வாய்ககால மேற்கு ஸரஸ்வதி தமபிபபிளளை பெணணுக்குரியவாதனம தெற்கு மேற் சொலலப்பட்ட காணி — பதிவிலககம L 7/93

14, டேவிற் ரேட், யாழ்ப்பாணம். 17-6-73

அ. போ. எதிர்மன்னசிங்கம்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
275 30-11

யார் இப்பெரியரை நினைவு கூரும் வகையில் ஏதாயினும் ஒரு பணி புரிதல் வேண்டும்.

இவருக்கு சகோதரர்கள் வைத்தியநாதன் சுந்தரமென்னும் இருவர் இருந்தார்கள். இவருக்கு ஒரேயொரு புததிரன். அவர் பெயர் கந்தசுவாமி. அவருக்கு எட்டுப் பிள்ளைகள், அவர்களில் ஒருவர் தான் சைவபிரகாச யந்திரசாலையில் இலிகிதராகக் கடமை புரியும் திரு. க. முத்துக்குமாரசுவாமி அவர்கள்.

பண்டிதர் அவர்கள் கல்விகற்பிற்கும் முறை நன்கு தெரிந்தவர். அடக்கம் இன்சொல் இறைபக்தி அன்பு முதலிய பண்புகளுக்கு உறைவிடமானவர். நாவலர் பெருமானைப் போல திருவாசகத்தில் [illegible] உள்ளவர். அவருடைய ஆன்மா பிரிய முன் திருவாசகத்தை ஓதச்செய்து தில்லைக்கூத்தனை இடையறாது சிந்தித்துக் கொண்டு அவருடைய [illegible]தபாத்தை 13. 6. 74 வியாழக்கிழமை பி. ப. 2 மணியளவில் அடைந்தனர்.

— மு. ம. —

## சிவனடியார் ……

:1 ஆம் பக்கத்தின் வளர்ச்சி

சென்றார்.

சிவனடியாரைச் சிவனென மதித்தலே பெருந்தவம். சிவனுக்கும் சிவனடியாருக்கும்பேதயில்லை, சிவனடியாரைச் சிவன் என மதித்தொழுகிய நெறியே கௌரிக்குச் சிவபதத்தை யளித்தது. சிவனடியார் பெருமை அளத்தற்கரியது.

## தீர்மானங்கள்

வடமாநில சைவ இளைஞர் மாமன்றத்தின் நிர்வாக சபைக் கூட்டம் 16 6-74 மாலை 6 மணிக்கு திரு. சி. சிவபாலசிங்கம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1. கல்வி பொதுத்தராதர பத்திரப் பரீட்சைக்குரிய சமய பாட வகுப்பு இலவசமாக நடாத்துதல். 2. திருக்கோயிலில் வேதகாம முறைப்படி உற்சவங்களை நடத்துமாறும், இக்காலங்களில் அடியார்களின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கா வண்ணம் ஒலிபெருக்கி மூலம் திருமுறை நற்சிந்தனை, உற்சவ உண்மைகள், முதலியன ஒலி பரப்ப ஆலய நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்ளுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. 3. கிராமங்கள் தோறும் சென்று கோவில்கள், பாடசாலைகள், மடாலயங்கள் ஆகியவற்றில் சமயப்பிரசங்கம் செய்தல் இத்தீர்மானத்தின் படி முதலாவது நிகழ்ச்சி 24-6 74 மாலை 6 மணிக்கு சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவிலில் மாணிக்கவாசகர் குருபூசை விழாவை நடாத்துதல்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல M B 12337

(1) ஞானேந்திரக் குருக்கள் நாகேந்திரக் குருக்கள்
(2) நாகேந்திரக் குருக்கள் சண்முகரத்தினக் குருக்கள்
இருவரும், அராலி வட்க்கு, வட்டுக்கோட்டை
எதிராக வழக்காளி
(1) கந்தையா வல்லிபுரநாதன்
(2) தேவசகுந்தலா, இருவரும் கொக்குவில் கிழக்கு, கொக்குவில் - எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் M B 12837-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1974 ம் ௵ ஆடி ௴ 29-ம் திகதி (29-7-74) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3074/-ம் 22-11-71 தொடக்கம் 5 10-72 வரைக்கும ரூபாய 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபாய் 476-10

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டமும் பிரிவும் நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கு கொத்தன் தோட்டம் நி. பர. 2, வீடும், பயிர்களும், தென் கிழக்கிலிருக்கும கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் சொலலப்பட்ட நி. பர. இரண்டும் எல்லை கிழக்கு: முருகேசு நல்லதம்பிக்கும் பங்காளருக்குரிய ஆதனம், வடக்கு:- ஒழுங்கை, மேற்கு:- தெற்கே இருக்கும் காணிக்கு போகும் ஒழுங்கை, தெற்கு:- கனகசபை குலவீரசிங்கத்துக்கும மனைவி மருக்கொழுந்துவுக்குரிய ஆதனம்.

"வேல் பதி" — S. சங்கரப்பிள்ளை J. P
புத்தூர், 21—6—74, — கொமிஷனரும், விலைமதிப்பாளரு
86 21-6-7

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B. 11835

1. கனகசபை சுந்தரலிங்கம் 2. மனைவி இராசேஸ்வரி
இருவரும், தங்கோடை, காரைநகர் -- வழக்காளி
எதிராக
1. ஆறுமுகம் கனகசபை கைம்பெண் பாக்கியலெட்சுமி
B A. தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம். —எதிராளி

யாழப்பாணம் மாவட்ட நீதிமனற M B 11835ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணி 1974-ம் ௵ ஆடி மாதம் 31ம் திகதி (31—7—74) புதன்கிழமை முறபகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 13409/-ம், 7-7-70 தொடக்கம் 30-1-71 வரைகதும் ரூபா 10000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 513-81 இதில் ரூபா 10200/- கழிக்கவும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் வண்ணார்பண்ணை கோவற்பற்று வண்ணார்பணணை தென்மேற்கிறை வாரிவளவு நி. பர. 7 ஆனல் 1951ம் ஆண்டு ஆடி மாதம 13ம் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளா M. அலோசியஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1541ம் இலகக படத்தின்படி நி. பர. 5 குளி 6, 4/5ம் இரு கல்வீடுகளும் கிணறும் செய்பயிர் வான் பயிர்களும் சொல்லபபட்ட நி பர. 5 குளி 6, 4/5ம் எல்லை கிழக்கு இராமலிங்கம் நடேசுவுக்கும மகள் பாக்கியம் இரத்தினசிங்கத்தின் மனைவிக்குரிய ஆதனம, வடககு:- பொனனையா இராசரத்தினத்துக்கும் மறுபோகளுக்குமுரிய ஆதனம், மேற்கு:- தாமோதரம்பிள்ளை பெண் நல்லநாயகியின் ஆதனமும், ஒழுங்கையும் நாகலிங்கம் பெண் தங்கம்மாவின் ஆதனமும்: தெற்கு:- நாகலிங்கம் பெண் தங்கம்மாவிற்கும் கணபதிப்பிள்ளை கனகரத்தினத்துக்கும் மறுபோர்களுக்குமுரிய ஆதனங்கள், இதடங்கலும.

'வேல்பதி' — S. சங்கரப்பிள்ளை J. p.
புத்தூர். — கொமிஷ்னர் & விலைமதிப்பாளர்
17-6-74. — 85 21-5-73,

## பசு ஞானம்

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

தெளிவுடன் எடுத்துரைத்து அளவை இலக்கணத்தோடு ஒத்திசைவுள்ள உண்மை முடிபு காட்டும் தத்துவக் கொள்கையும் ஆகிய இவையெல்லாம் சைவ சித்தாந்தத்தின் கண்ணே தெளிவாகக் காணப்படுவதால் எல்லா மதங்களும் சித்தாந்தசைவத்துள் அடங்குவனவே இன்னும் ஞானமும் பத்தியும் ஒன்றை ஒன்று பிரிந்திராமல் ஒன்று காரணமாயும் மற்றொன்று காரியமாயும் பிணைத்து நின்று முத்திப் பேற்றை அடையச் செய்யும் சமயம்'', -(மறைமலை அடிகள்.

(வளரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ, இல. M. B 17708

T.A. ராசையா பிள்ளை கைம்பெண் எலிசபெத் முத்தம்மா கரம்பன் தெருகு ஊர்காவற்றுறை
வழக்காளி
எதிராக
1- ஐயம்பிள்ளை சுப்பிரமணியம் மனைவி 2. சின்னம்மா 3. சுப்பிரமணியம் சண்முகநாதன் எல்லாம் சரவணை கிழக்கு ஊர்காவற்றுறை எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B, 11708-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1974 ம் ௵ ஆடி மாதம் 26 ம் திகதி 26-7-74 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 3932-50 ம 23-5-70 தொடக்கம் 2-7-71 வரைக்கும் ரூபா 3700/-18 வீதவட்டியும அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 438-45.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற் கோவிற்பற்று சரவணை இறை 'Kalliddippan' நிலைப்பரப்பு (5 L M S. V C) கிணறும தெற்கெல்லை காணியின் கிணற்றுப் பங்தும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு குமாரசாமி பெண பரமேஸ்வரியின் ஆதனம் வடக்கு ரோட்டு மேற்கு முதலாம் எதிரியின ஆதனம் தெற்கு சுப்பிரமணியம் பெண் நவமணியின் ஆதனம இதடங்கலும்.

S. சங்கரப்பிள்ளை J P
கொமினஷர் விலைமதிப்பாளர்
'வேல்பதி', புத்தூர்.
84 21-6

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ.இல: M B 10854

காரைதீவு மேற்கு S ஆறுமுகம் கணவதிப்பிள்ளை -வழக்காளி
எதிராக
காரைதீவு மேற்கு வேலுப்பிள்ளை தர்மலிங்கம் -எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10854 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1974 ம் ஆ ஆவணி ௴ -9ம் திகதி (9-8-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசத்த ஏலத்தில விற்கப்படும.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 4591/-ம 2-6 69 தொடக்கம் 5-8-70 வரைக்கும ரூபா 3000/-க்கு 10 வித வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும கோட்டுச் ரூபா 353/- அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 243 சதம 55 வெலியாத்துச் செலவு ரூபா 59/- இனிமேல் வரும் செலவு ரூபா 47 சதம் 45 மேல் குறிக்தப்பட்ட இத்தீர்வைத் தொகையில் 5-4-71 இல் கொடுககப்பட்ட ரூபா 1000/-மும் அதன் பின் கொடுக்கப்பட்ட ரூபா 500 உம் கோட்டுச் செலவால் கொடுக்கப்பட்ட ரூபா 50 உம் கழிவாக.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பற்றுப் பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு மேற்கு இறை [illegible] சன புலசிடை'' [illegible] நிலப் பரப்பு இலாசசம 7ம் குழி 1ம் பனை வடலியும் பனைகளுடனும் வீடுகளுடனும் எல்லைகள்:- கிழக்கு:- வைத்திலிங்கம் பெண் பொன்னம்மாவினுடையதும். அம்பலவாணர் பெண் சின்னக்குட்டியினுடையதும், கந்தப்பு நாகமுத்துவினுடையதும், கணபதிப்பிள்ளை கைம்பெண் தெய்வானையினுடையதும், ஆதனங்கள்.
வடக்கு:- சுப்பிரமணியம் திருவருலானந்தமுடைய ஆதனம்.
மேற்கு:- ஆறுமுகம சோமசுந்தரத்தினுடையதும, S ஆறுமுகம் கணபதிப்பிள்ளையினுடையதும். ஆதனங்கள்.
தெற்கு:- கந்தர் கைம்பெண் காமாச்சியினுடைய ஆதனம் [illegible]

ஏ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
கொமிஷனர் விலைமதிப்பாளர்.
107, பெரிய தெரு,

## Commission Sale

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல: 12054

(1) சின்னையா கிருஷ்ணசாமி, தொண்டமன்னறு
எதிராக —வழக்காளி
(1) சின்னத்தம்பி சோதிலிங்கம்,
(2) பெண கருணவதி, தொண்டமன்னறு —எதிராளிகள்

மேற்குறித்த இலகக வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும ஆதனத்தை 1974 ஆம் ௵ யூலை மாதம் 22-ம் திகதி (22-7-74) திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணிதொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று, தொண்டமன்னறு இறை மணற்கொல்லை நி. பர. 1, 3/8 இதில் வடக்குப் புறமாக மூன்றில் ஒரு பங்கில் மேற்கரை வாசிக்கு குளி 4¾ இதில் சொரியலாய் அரைவாசியும் வடக்குப் புறமாக குளி 3/8ம் நீக்கி மிகுதி குளி 3, 15/16 ஒரே கண்டமாயிருக்கிறது. ஆட்சிப்படி கூடிய குளி 13½ எல்லை கிழக்கு: சின்னத்தம்பி தமபையா பெண் சின்னம்மாவுக்கும மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு சுப்பையா சரவணக்கத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு வல்லிபுரம் சின்னராசாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம, இவ்வெல்லைக்குட்பட்ட நிலம, கல்வீடு, தென்னைகள், கிணறு, அடுக்களை முதலியனவும்.
(மதிப்பிட்ட விலை ரூபா 15,000/-)

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: | ரூபா | 6562 50 |
| வட்டி ரூபா 5000/-க்கு 15 வீதப்படி 3-11-72 தொடக்கம் 2-5-73 வரை | | 375 00 |
| வட்டி ரூபா 6,937/-க்கு 5 வீதப்படி 2-5-73 தொடக்கம் 2-12-73 வரை | | 202 00 |
| வட்டி ரூபா 6,937/-க்கு 5 வீதப்படி 2-12-73 தொடக்கம் 11-2-74 விற்பனவு வரை | | 57 80 |
| | மொத்த ரூபாய் | 7,197 30 |
| 31-1-74ல் கட்டப்பட்ட பணம் | | 3000 00 |
| | | 4197 30 |
| வட்டி ரூபா 3937/-க்கு 5 வீதப்படி 11-2-74 தொடக்கம் 22-7-74 விற்பனவுவரை | | 82 00 |
| | தொகை ரூபா | 4279 30 |

"சிவலிங்க நிலையம்" — க. நல்லலிங்கம்
வி. எம், ரோட், — கோட் கொமிஷனரும்
பருத்தித்துறை, — விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பதுளை மாவட்ட நீதிமன்றம்

தம்பிப்பிள்ளை ஜெகநாதன்
இல: 28, லோவர் கிங் வீதி, (Lower King Street) பதுளை —வழக்காளி
இல. M. B. 8?93 எதிராக
(1) சின்னத்தம்பி சிவரெட்டினமும் மனைவி
(2) இராசலட்சுமி இருவரும், மானிப்பாய் தற்பொழுது இல 6, பாங்க் வீதி, (Bank Road) பதுளை
எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கட்டளைப்படியும் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும ஆதனத்தை 1974ம் ஆண்டு செப்ரெம்பர் (புரட்டாதி) மாதம் 3ம் திகதி (3-9-74) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்த காணியில் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு டிவிசன் மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாயிறை "விட்டாண்டி தோட்டம்" நிலப்பரப்பு 9ம் குழி 9¾லும் பயிர்களும் கிணறும் அதைச் சேர்ந்தவைகளும்.
எல்லை கிழக்கு:- முருகேசு வயிரமுத்துவின் ஆதனம், வடக்கு:- ரோட்; மேற்கு:- காலம்சென்ற சுந்தரம்பிள்ளை உரிமையாளர்களின் ஆதனம், தெற்கு:- ஜெபரத்தினம் கனகசபையினுடைய ஆதனமும், ஒழுங்கையும்
இதில் இருக்கும் முழுக் காணியில சொரியலாக 9/16 பங்கு (பதினறில் ஒன்பது பங்கு)

யாழ்ப்பாணம் காணிக்கந்தோர்
பதிவு இல: E 422/127
(Volume E 422 Folio 127)

தீர்வையின் பிரகாரம் எதிரிகளால் இறுக்கவேணடிய மொத்த தொகை குறிப்பு:

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: முதலும் வட்டியும் | ரூபா | 12,550 00 |
| வட்டி ரூபாய் 10,000/-க்கு 8 வீதப்படி 28-11-71 தொடக்கம் 13-12-72 வரை | | 833 33 |
| | | 13383 33 |
| வட்டி ரூபாய் 13,383/- சதத்துக்கு 8 வீதப்படி 14-12-72 தொடக்கம் 3-9-74 வரை | | 1843 93 |
| | | 15227 26 |
| நிர்ணயிக்கப்பட்ட கோட்டுச் செலவு | | 350 00 |
| வெலியாத்துச் செலவும் | | 48 75 |
| | மொத்த ரூபா | 15626 01 |

ஏ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
107, பெரிய தெரு, — வெந்தீஸ் கொமிஷனரும்
யாழ்ப்பாணம், — விலை மதிப்பாளரும்
18-6-74 — 82, 2-16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவராயினர் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த வரு ஆனி மீ எ-உ வெள்ளிக்கிழமை [1974]

# திருநீறு வழங்குந் திருத்தொண்டு

வாழ்க்கை நெறி வகுத்த சமய நூல்கள் கூறியவற்றுள் முதற்கண் நோக்குவதற்குரிய தொன்று திருநீறு தரிக்கும் முறை. மக்களின் சமய ஒழுக்கத்துக்கு மிக்கதோர் பணியாற்றிய நாவலர் நற்றகையார் பாலபாடங்களிலும் சைவவினுவிடைகளிலும் பெரியபுராண பேருரைகளிலும் திருநீற்றின் மகிமையைச் சீரிய முறையில் எடுத்தாண்டிருக்கின்றனர். நீறில்லா நெற்றி நெறியற்றதென்று காட்டியும் மந்திரமும் தந்திரமும் சுந்தரமும் ஆவது கூறி, வேதத்திலுள்ளதென்பதை விளக்கி, காணத் தகும் கவினைத் தருவது எனும் கருத்தை விருத்திசெய்து சாலச்சிறந்த சைவச் சால்பு மிக்க பேரறிஞர்கள் ஆங்காங்கு அறிவுரை அமைத்திருக்கின்றனர். ஆகையால் ஈண்டு அவ்வழி மேலும் வரையாது விரிவஞ்சி விடுக்கின்றனம்.

மக்கள் நல்ல வண்ணம் வாழ வேண்டும். அவ்வகையில் அவர்களுக்குப் பணி ஆற்றல் வேண்டும் என்று சைவநெறியாளர் திரு க. கனகராசா அவர்கள் செய்து வரும் பெருந் தொண்டுகளுக்கெல்லாம் மேலாக இப்பொழுது சுத்தமான தூய வெண்ணீற்றை விபூதிப்பை என்று விபரிக்கப்பெறக்கூடிய விதத்தில் அமைத்து அன்புடன் வழங்கி வருகின்றனர். விபூதியைப்பற்றி விளக்கும் நூல்களை அச்சேற்றி அன்பளிப்புச் செய்வதோடமையாது அந்தத் திருப்பிரசாதத்தையுமே அன்னார் வழங்குவது அரியதோர் பணியாகும்.

கோயில்களில் இந்நாட்களில் வழங்கப்படும் விபூதி விதிமுறைப்படி உண்டாக்கப்பெறுதென்றும பசுமை மற்றும் களங்கமுற்றும் இருக்கின்றதென்பதை யாவரும் அறிவர். பழனிப் பழம்பெரும் கோவில்களிற் பெறும் திருநீற்றின் செம்மையைப்போலத் திருக்கேதீச்சுவரத் திருப்பணியாளர்களும் திருநீற்றை முறைப்படி அமைத்துக் கொடுக்கின்றனர். அந்த உகந்த வழியிலே திருவாளர் கனகராசாவும் பத்தி தரத்தக்க பரவ வினியதான சித்தி திகழ்விக்கும் திருநீற்றுத் திருப்பணியைச் சைவ உலகம் பாராட்டுகின்றது. இப் பெரும்பணி எப்பொழுதும் இயங்க இறைவன் இன்னருள் பாலிப்பானாக.

## அருளை மறந்திருத்தல் ஆன்மாவின் குற்றமே

'சுத்த நீரிலுள்ள வெள்ளத்தில் நிற்கின்ற ஒருவன் விடாயினல் நாவறண்டு வருந்துகின்ற வேளை விடாயினல் வருந்துகின்றது போல இறைவனுடைய திருவருள் எங்கும நிறைந்திருக்கவும், அதனைப்பெற்று துன்பத்தினின்றும் நீங்காத என்னை விட்டுவிடப் போகின்ருயோ. விரும்புகின்ற அடியாரது உள்ளத்தினுள்ளே நிலைபெற்றிருக்கின்ற உத்தரகோச மங்கைக்கரசே அங்ஙனமகன்ற வழியில் நின்று உழல் பவனுகிய எனக்கு என்றுங் கண்டறியாத பெருங் களிப்பையருள்வீராக" என மணிவாசகப் பெருமான் சிவபெருமானிடத்தில் விண்ணப்பஞ் செய்கின்ருர்.

வெள்ளத்து ளுவற்றியாங்தன்னருள்
பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கிலேனை விடுதிகண்டாய் விரும்புமடியார்
ருள்ளத்தினுள்ளாய் மன்னுமுத்தர கோசமங்கைக்கரசே
கள்ளத்து ளேற்கருளாய் களியாத களியினையே.

இத் திருவாசகச் செய்யுளில் மணிவாசகப் பெருமான் ஆன்மா இறைவன் அருளை மறந்திருப்பதற்கு வெள்ளத்துள் நாவற்றி வருந்துகின்றமையை உவமையாகக் கூறுகின்ருர்,

எம்பெருமானுடைய திருவருள் அகண்டமாய் உள்ளும்புறம்பும் நிறைந்திருக்க அதனை உணராதிருப்பது திருவருளின் குற்றமன்று, ஆன்மாவின் குற்றமே.

ஆன்மாவின் இக்குறையை விளக்க உமாபதி சிவாசாரியாரும் இவ்வுவமையை எடுத்தாளுகின்ருர்

"வெள்ளத்து ளுவற்றி யெங்தும் விடிந்திருளாம்
கள்ளத் திறைவர் கடன்"

இறைவனுடைய அருள் எங்கும் நிறைந்திருக்க அதனல்வரும் பேரின்பத்தை நுகராமல் பொய்வழியில் நின்றுழலும் ஆன்மாக்களை கள்ளத்திறைவர் என்கின்ருர். வெள்ளத்துளுவற்றி வருந்துகின்ற உவமை இங்கும் காணப்படுகின்றது. ஆன்மா அருளை மறந்திருப்பதற்கு உமாபதி சிவாசாரியர் இன்னெரு உவமையையும் எடுத்தாளுகின்ருர். எவ்விடத்தும் இருள் நீங்கி விடிந்த பின்பும் கண்ணைப் பயன்படுத்தாமை, ஆன்மா அருளை மறந்திருப்பதற்கு உவமையாக எடுத்தாளப்பட்டிருக்கின்றது. ஆகவே, திருவருளை உணராமை ஆன்மாவின் குற்றமேயொழிய திருவருளின் குற்றமன்று.

உ
மாணிக்கவாசக சுவாமிகள்

## குருபூசை



நாள்: ஆனி மீ ௧0-ஆம் திகதி
[24-6-74] திங்கட்கிழமை

இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:
முற்பகல் 9—00 மணி: சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை
ஸ்ரீமத். ம. சுப்பிரமணியக் குருக்கள்
11-00 மணி நாவலர் மண்டபத்தில் - நடராஜர் பூசை,
நால்வர் பூசை, சிவபுராணம் ஓதுதல்,
'மாணிக்கவாசகர்' என்னும் பொருள்பற்றி விரிவுரை.
சைவப் பெரியார் திரு. சி. தம்பிையயா அவர்கள்.
12 மணி அன்னம் பாலிப்பு,

அபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

வை. இரகுநாத முதலியார்
காரியதரிசி. 21-6-74

மு. மயில்வாகனம்.
சமயப் பிரசார அமைச்சர்.

நல்லைக் கீர்த்தனை

## நல்லூரின் நாதனே!

["இயலிசைவாரிதி" யாழ்ப்பாணம் ந. வீரமணி ஐயர்]

இராகம்: செஞ்சுருட்டி ; தாளம்: ஆதி

பல்லவி

நடப்பதைத் தடுக்க நாம் யாரோ? — முருகா
இடர் பல வந்தாலும் தடுத்திடும் நினையன்றி (ந)

அநுபல்லவி

படமுடியாத் துன்பம். பாரினில் வந்தாலும்
அடர்வடி வேலேந்தி அருளும் உனையன்றி (ந)

சரணம்

மூன்னம் அசுரர்களின் முடிவிலா அகந்தையை
வன்ன வேலெடுத்தேந்தி வதைத்தவன் நீயன்றோ
இன்னல்கள் வந்தாலும் இடர்நீக்கும் தெய்வமே நீ
நன்னகர் நல்லூரின் நாதனே நினையன்றி. (ந)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில், 21—6—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெறறது.

பிரதம ஆசிரியர்: திரு, நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர்: திரு. மு. மயில்வாகனம்

## சிவாசாரியர்களுக்கு ஆசாரியாபிஷேகம் முக்கியம்

"ஆலயக்கிரியைகளையும் ஏனைய கிரியைகளையும் செய்யும் சிவாசாரியர்கள் ஆசாரியபிஷேகம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். சிவாசாரிய பரம்பரையில் தோன்றிய அனைவரும், ஆசாரியபிஷேகம் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைப் பின்போடாது தத்தமக்குரிய காலத்தில் ஆசாரியபிஷேகம் பெற்றுக் கொள்ள வேண்டும்."

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் ஆதீனத்தைச் சேர்ந்த பிரம ஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்களின் சிரேட்ட புத்திரன் பரமேஸ்வர சர்மாவின் ஆசாரியபிஷேகத்தின்போது பிரதமகுருக்களாயிருந்த பிரதிட்டாபூஷணம் பிரமஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலில் விமரிசையாய் நடைபெற்ற இவ் வைபவத்தில் கைலாசநாதக் குருக்கள் அவர்கள் நடத்திய கிரியைகளின் போது மேலும் குறிப்பிடுகையில் "சிவாசாரியர்கள் ஆசாரியபிஷேகம் பெற்றால் மட்டும் போதாது. சிவாசாரியர்களாய் வாழ்ந்து தமது சிஷ்யர்களுக்கு வழிகாட்ட வேண்டும இன்று என்னிடம் ஆசாரியபிஷேகம் பெற்றுக் கொண்ட பரமேஸ்வரசர்மா சகல யோக்கிய தாம்சங்களும் பொருந்தியவர். அவர் நல்வாழ்வு வாழ்வாராக! என்ருர்.

திருவருளை முன்னிட்டு பரமேஸ்வரசர்மாவுக்கு ஈசான சிவாசாரியர் என்ற திட்சா நாமமும் வழங்கப்பட்டது.

## கந்தபுராண பாராயணம்

சாந்தையர்மடம் - ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் இரண்டாவது முறையாக நடைபெற்று வந்த கந்தபுராண பாராயணம் 23-6-74 ஞாயிற்றுக்கிழமை நிறைவுறும். பண்டிதர் திரு பொன். அம்பலவாணர் அவர்களே பாராயணத்தை நடத்தியுள்ளார். அன்றுமாலை 6 மணிக்கு விசேட அபிஷேகாராதனை, என்பன நடைபெறும். வியாகரண சிரோமணி பிரம்ம ஸ்ரீ கி. சீதாராம சாஸ்திரிகள் ஆசியுரை வழங்குவார்கள்.

## வாழ்த்துகின்ருேம்

எங்கள் சபைத் தலைவரும், இந்துசாதனம் தமிழ் - ஆங்கில பிரசுரங்களின் பிரதம ஆசிரியருமான திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் சட்டத்தரணி திரு. சிவ. சிறீதரனுக்கும், அளவெட்டி தெற்கு இளைப்பாறிய ஆசிரியர் திரு. வி. கனகரத்தினம் அவர்களின் புத்திரி திருநிறைசெல்வி ஞானசக்திக்கும 24-6-74 திங்கட்கிழமை பகல் 11-50 மணிமுதல் 1-25 மணி வரை அமையும் சுபமுகூர்த்தத்தில் திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெறும்

மணமகனும் மணமகளும் சகல ஐஸ்வரியங்களையும்பெற்று இன்பமாக வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org